May the peace I find in this silence flow into my home and my community. Let Your light guide my steps so that I may reflect Your calm to a world in need.

***Jesus, I trust in You. Amen***.

**Dr. Priscilla A.**
**Trichy.**

# சகோதரத்துவத்தில் சீடத்துவம்
## (பாகம் - 2)

இறை இயேசுவின் அன்புமிக்க சகோதர சகோதரிகளே!

இறைமகன் இயேசுவின் தூய திருப்பெயரால் வாழ்த்துகளையும் வணக்கங்களையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த இதழில் ‘சகோதரத்துவத்தில் சீடத்துவம்’ என்ற தலைப்பின் கீழ்:

★ சகோதரர் என்ற அழைப்பின் முக்கியத்துவம்

★ சீடர் என்றால் யார்? பக்தர் என்றால் யார்?

★ இயேசுவின் சீடராக மாற இறைவனின் அழைத்தல்

★ இயேசுவின் சீடராக இருக்கவேண்டிய தகுதிகள்

போன்ற சிறந்த சீடருக்கான அறிகுறிகள் சிலவற்றைப் பார்த்தோம். அதன் தொடர்ச்சியாக இந்த இதழில், ‘சீடத்துவத்தின் முன்மாதிரி’ என்ற தலைப்பின் கீழ் என் பதிவுகளைத் தொடருகின்றேன்.

### I. **சீடத்துவத்தின் முன்மாதிரி** (Role Model) **இயேசு**:

**சீடரின் காலடிகளைக் கழுவுதல்**:

“இயேசு பந்தியிலிருந்து எழுந்து, தம் மேலுடையைக் கழற்றி வைத்துவிட்டு, ஒரு துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக்கொண்டார். பின்னர், ஒரு குவளையில் தண்ணீர், எடுத்துச் சீடர்களுடைய காலடிகளைக் கழுவி இடுப்பில் கட்டியிருந்த துண்டால் துடைக்கத் தொடங்கினார்.” – யோவான் 13:4-5

“ஆகவே ஆண்டவரும், போதகருமான நான் உங்கள் காலடிகளைக் கழுவினேன் என்றால், நீங்களும் ஒருவர் ஒருவருடைய காலடிகளைக் கழுவக் கடமைப்பட்டிருக்கிறீர்கள். நான் செய்தது போல நீங்களும் செய்யுமாறு நான் உங்களுக்கு முன்மாதிரி காட்டினேன்.” – யோவான் 13:14-15

## தாழ்ச்சியின் உச்சமும், நிபந்தனையில்லா அன்பும் கொண்டவர் இயேசு:

இயேசு தான் ஒரு இறைமகனாக இருந்தும், ஒரு தலைவர் தனது தொண்டர்களிடத்தில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதை முன்மாதிரி காட்டினார். சீடர்களின் காலடிகளைக் கழுவுவது ஒரு தாழ்ச்சியின் அடையாளமாக இருந்தாலும் அது மூன்று நிலைகளில் நிபந்தனையற்ற அன்பினால் சுத்திகரிப்பு செய்யும் செயலைக் காட்டுகின்றது.

**முதல் நிலை:** உடல் ரீதியாக ஒருவரின் உடனடித் தேவைகளை அவரது கல்வி, வயது, சாதி, மதம், மொழி, இனம், பாலினம் என்ற வேறுபாடுகளை பார்க்காமல், தன்னுடைய சுய அந்தஸ்து, கர்வம், ஆணவம், அகந்தை ஆகியவற்றைக் கழற்றி வைத்துவிட்டு உடனே உதவி செய்யும் செயலில் இரங்குதல்; ஏன் அம்மனிதர் (உதவி வேண்டிய நிற்பவர்) பரம்பரை எதிரியாக இருந்தாலும்கூட இறைமகன் இயேசுவைப் போல மனித நோக்கத்துடன் உடனே அவருடைய தேவையை நிறைவேற்றுதல்.

**இரண்டாம் நிலை:** மனரீதியாக பாதிக்கப்பட்ட மனிதருக்கு வேண்டிய உளவியல் ரீதியான சிகிச்சையை நம்முடைய சுயகர்வம் பாராமல் தாழ்ச்சி மிகுந்த மனதுடன் அம்மனிதரின் மனதில் படிந்திருக்கும் அறியாமை மற்றும் போதிய விழிப்புணர்வு இல்லாமை ஆகியவற்றை போதுமான பொறுமையுடன் தூய்மைப்படுத்த வேண்டும். நாம் உளவியல் நிபுணராக இருக்கவேண்டும் என்ற அவசியமில்லை, பொறுமையுடன் அவரது மனத்துயரத்தை கனிவுடன் கவனிப்பதும், உடனிருப்பதும் ஆகியன மட்டுமே; அதன் மூலம் அவரது பாதி துன்பத்தை நீக்கிவிடலாம். மேலும் அவருக்குள்ளே இருக்கும் உந்து சக்தியையும் (Self Empowerment) தூண்டிவிட வேண்டும். தொடர்ந்து அம்மனிதரின் தன்னிலையைப்பற்றி உணரும்வரை உதவி செய்திடல் வேண்டும்.

**மூன்றாம் நிலை:** ஆன்மிக ரீதியாக ஒருவர் பிறருக்கு உதவும்முன் கடவுள் திருமுன் தன்னையே தாழ்த்திக் கொண்டு செபித்து, திருப்பாடல்களாலும், இறைவார்த்தைகளாலும் தன்னை சுத்திகரிப்பு செய்தும், பாவசங்கீர்த்தனம் செய்வதன் மூலமாகவும் சுத்திகரிப்பு செய்துகொள்ள வேண்டும்.

தனது உடல், உள்ளம், ஆன்மா அனைத்தையும் முழுமையாக ஆண்டவரிடத்தில் ஒப்படைக்கும்போது நமது உள்ளம் இறைவன் தங்கும் இல்லமாக மாறும், மேலும் நம்மைத் தொடர்ந்து தூய்மையில் மெருகேற்றும்போதும், மிகுந்த தாழ்ச்சியுடன் இறைவனை மன்றாடும் போதும் அங்கு நம்மிலும் மற்றவரிலும் இயேசுவைக் காண்கின்றோம்.

எடுத்துக்காட்டாக சொல்லப்போனால் இம்மூன்று நிலைகளையும் சிறப்பாக செய்தவர் அன்னை தெரசா அவர்கள்.

“தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பார்கள்.” – மத்தேயு 5:8

## II. சீடத்துவத்தின் முன்னோடி அன்னை மரியா: (லூக்கா 1:28-30)

வானதூதர் மரியாவுக்குத் தோன்றி அருள்மிகப் பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கிறார் என்றார். இவ்வார்த்தைகளைக் கேட்டு அவர் கலங்கி, இந்த வாழ்த்து எத்தகையதோ என்று எண்ணிக் கொண்டிருந்தார். வானதூதர் அவரைப் பார்த்து மரியா, அஞ்ச வேண்டாம்; கடவுளின் அருளைக் கண்டடைந்துள்ளீர்.

அன்னை மரியா இறை மீட்புப் பயணத்தில் தன்னை முழுமையுடன் ஈடுபடுத்திக்கொண்டு இறை இயேசுவை மையமாகக்கொண்டு, இறைவன் தரும் செய்திகளை தனது ஆழ்மனதில் நிறுத்தி அவற்றை அல்லும் பகலும் தியானிப்பதோடு நின்றுவிடாமல் இறை பணிக்கு தாழ்ச்சியோடும் அன்போடும் பிறர்நலன் உணர்வில் அக்கறையுடன் பங்கேற்கிறார்.

அதிதூதர் கபிரியேல் வழியாக வந்த மங்களமான செய்தி முதல் தனது விண்ணேற்பு வரை ஏன் இன்று வரையிலும் இறை மீட்பு பயணத்தில் இயேசுவின் பிறப்புமுதல் இறப்புவரை அவரோடு பயணித்து, தூய ஆவியின் வருகை வரையிலும் இயேசுவின் சீடர்களை ஒருங்கிணைந்து அவர்களை சிதறவிடாமல் காத்து, இன்று வரையிலும் திருஅவைக்குத் தாயாக இருந்து காத்து வருவதினால் அன்னை மரியா சீடத்துவத்தின் முன்னோடியாக விளங்குகின்றார்.

## III. இறைப்பணியில் சீடர்கள் எதிர்கொள்ளும் சவால்கள்:

பழைய ஏற்பாட்டிலும் சரி, புதிய ஏற்பாட்டிலும் சரி, இறைவனால் தேர்ந்துகொள்ளப்பட்ட இறைவாக்கினர்களோ, இறை ஊழியர்களோ இறைவனுக்கு சேவை செய்யும் போது பல தடைகளையும், எதிர்ப்புகளையும், நோய், பிணிகளையும், இயற்கை சீற்றங்களையும் கடந்துதான் வரவேண்டிய கட்டாயம் உள்ளது.

பழைய ஏற்பாட்டில் மோசே முதல் புதிய ஏற்பாட்டில் இறைமகன் இயேசுவும் அவரது பெற்றோர் மற்றும் இயேசுவின் சீடர்கள்; திருத்தொண்டர்கள்; குறிப்பாக புனித பவுல் முதல் மற்ற புனிதர்கள் வரை அவர்களது வாழ்க்கையில் பல்வேறு சவால்களை மேற்கொண்டதைக் காண்கின்றோம்.

எடுத்துக்காட்டாக மத்தேயு 13:54-58இல் இயேசு தமது சொந்த ஊரில் தமது உறவினர்களால் புறக்கணிக்கப்படுகிறார்.

இறைமகன் இயேசுவை ஏற்றுக்கொள்ளவும் அவரில் நம்பிக்கை கொள்ளவும் தயங்குகிறார்கள். அவர்களது புறக்கண்ணில் இயேசுவின் உறவுமுறை மட்டுமே தெரிகிறது. அவர்களது அகக்கண்களில் இயேசுவை 'அவரே நம்மை நோய், பிணி, பாவங்களிலிருந்து விடுவிப்பவர்' என்பது தெரியவில்லை.

அதுமட்டுமல்லாமல் இயேசுவின் போதனைகளை கேட்டும் அவரை உறவின் அடிப்படையில் தரம் தாழ்த்துகின்றார்கள்.

"ஒருவருடைய பகைவர் அவரது வீட்டில் உள்ளோரே ஆவர்." - மத்தேயு 10:36

இறை பணியில் இயேசுவிற்கு ஒரு யூதாஸ் இருந்ததுபோல் நம் சீடத்துவ வாழ்க்கையிலும் பகைவர் நம் அருகிலே இருப்பர். அது நமது உடல் நோயாக இருந்தாலும் சரி, பணித்தளத்தில் பணிபுரியும் சக பணியாளர்களாக இருந்தாலும் சரி, சில சமயங்களில் நமது உறவினர்களாக இருந்தாலும் சரி அவர்கள் மூலம் இறையாட்சியைக் காண்பதே சீடத்துவத்தின் மகிமை.

மத்தேயு 10:16-20இல் இயேசு தம் சீடர்களை; ஓநாய்களிடையே ஆடுகளை அனுப்புவதைப்போல நான் உங்களை அனுப்புகிறேன். எனவே பாம்புகளைப்போல முன்மதி உடையவர்களாகவும் புறாக்களைப் போலக் கபடமற்றவர்களாகவும் எச்சரிக்கையாக இருக்கக் கூறுகின்றார்.

இன்றைய காலக்கட்டத்தில் நம்முடைய இறை பணியில் நமக்கு எதிராகப் பொய் வழக்குகளும், பணி செய்வதற்குத் தடையாக பல இடையூறுகளும் இன்னும் பற்பல சேதங்களும் நமக்கு எதிராக விளைவிப்பதையும் இன்று கண்கூடாகக் காண்கின்றோம். இதுவும் நமக்கும் நமது திருச்சபைக்கும் ஏற்படும் சவால்.

எதிரிகள் நம்மை சூழ்ந்துகொண்டாலும் அவர்கள் மத்தியில் நாம் என்ன பேசுவது எப்படி சமாளிப்பது? என்பது பற்றி கவலைப்படாமல் அந்நேரத்தில் தூய ஆவியார் நமக்கு வழிகாட்டுவார் என்பதைத் தெளிவாக மத்தேயு 10:19-20இல் கூறுகின்றார்.

யோவான் 16:20இல் உங்கள் துயரம் மகிழ்ச்சியாக மாறும்: நம்முடைய இறை பணியில் இவ்வுலகம் நம்மை எவ்வளவுதான் சித்திரவதை செய்து நம்மை துயரத்துக்குள் அடைத்தாலும் இயேசு நம்மை ஒருபோதும் கைவிடமாட்டார். நமது துயரத்தை மகிழ்ச்சியின் உயரத்திற்குக் கொண்டு செல்வார். ஆகவே நாம் செய்யும் இறை பணியில் இவ்வுலகம் நம்மை வெறுத்து புறக்கணித்து அதிகப்படியான மன உளைச்சலைத் தந்தாலும் இறுதிவரை இயேசுவுக்காக நமது பணியில் தொடருவது ஒரு சவாலாக இருந்தாலும் அதை இன்முகத்துடன் மேற்கொள்ளும்போது நிலைவாழ்வு என்ற மீட்பினை நாம் பெறமுடியும்.

இதை நம் ஆண்டவர் மாற்கு 13:13இல் எனது பெயரின் பொருட்டு எல்லாரும் உங்களை வெறுப்பர். இறுதிவரை மனவுறுதியுடன் இருப்பவரே மீட்புப் பெறுவர் என்கிறார்.

ஆக துன்பங்கள் துயரங்கள் நம்மை வீழ்த்தினாலும் நம்மை தேர்ந்துகொண்ட இறைவனின் பணியில் செம்மையுடன் தொடர்ந்து பணியாற்ற இறைமகன் நம்மை அழைக்கின்றார்.

## IV. இறை பணியில் புறக்கணிப்பு செய்வோருக்கு எதிரான சான்று பற்றி இயேசு கூறியது (லூக்கா 9:5)

உங்களை ஏற்றுக்கொள்ளாதவர்களுடைய நகரைவிட்டுப் புறப்படும்போது, உங்கள் கால்களில் படிந்துள்ள தூசியை உதறிவிடுங்கள். இதுவே அவர்களுக்கு எதிரான சான்றாகும் என்றார்.

நாம் மேற்கொள்ளும் இறை பணியில் இறையாட்சி மலரத் தடையாய் இருப்போரின் உறவும் உடமையும் எதுவும் நம்மோடு ஒட்டக்கூடாது. அவர்கள் நம் காலில் படிந்துள்ள தூசிக்கு சமம் உதறிவிடுங்கள் என்று இயேசு அருமையாகக் கூறுகின்றார்.

ஆக தொடர்ந்து இறை பணியாற்றி அதில் இறையாட்சியை மலர தொண்டு செய்யும் சீடர்களின் பாதங்களில் சிலர் வெறுப்பையும், எதிர்ப்பையும் புறக்கணிப்பையும் நாட்டினால் அவைகளைத் தூசி எனத் தட்டிவிட்டு தொடர்ந்து நமது பணியைச் செய்யும்போது நமது பாதங்கள் (நாம் செய்யும் பணிகள்) இறை பிரசன்னத்தில் மிகவும் அழகாக இருக்கின்றன.

‘‘நற்செய்தி அறிவிப்போரின் பாதங்கள் எத்துணை அழகாய் இருக்கின்றன’’ என்று எழுதியுள்ளது. (உரோமை 10:15)

## V) அ. சீடர்களுக்கு இயேசுவின் அறிவுரையும் ஆறுதலும்:

‘‘கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியாவிட்டால் அது அப்படியே இருக்கும்; அது மடிந்தால்தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்.

தமக்கென்றே வாழ்வோர் தம் வாழ்வை இழந்துவிடுவர். இவ்வுலகில் தம் வாழ்வை ஒரு பொருட்டாகக் கருதாதோர் நிலைவாழ்வுக்குத் தம்மை உரியவராக்குவர்.

எனக்குத் தொண்டு செய்வோர் என்னைப் பின்பற்றட்டும்; நான் இருக்கும் இடத்தில் என் தொண்டரும் இருப்பர். எனக்குத் தொண்டு செய்வோருக்குத் தந்தை மதிப்பளிக்கிறார்’’ என்றார். (யோவான் 12:24-26)

இயேசுவின் சீடராகப் பணியாற்றுபவர்கள் நிலைவாழ்வை உரிமையாக்கிக்கொள்ள தம்மைத்தாமே இயேசுவைப் போன்று இழக்கவேண்டும்.

அதாவது இவ்வுலகைச் சார்ந்த பதவி, பட்டம், பெயர், புகழ், பெற்றோர், உற்றார், உறவினர், வசதி, செல்வம், அங்கீகாரம் இவற்றையெல்லாம் தியாகம் செய்தாலொழிய இயேசு விரும்பும் தொண்டராகவோ அல்லது நிலைவாழ்வுக்குத் தகுதியானவரோ ஆக முடியாது.

தம் சிலுவையைச் சுமக்காமல் என்னைப் பின்பற்றி வருவோர் என்னுடையோர் எனக் கருதப்படத் தகுதியற்றோர். தம் உயிரைக் காத்துக்கொள்ள விரும்புவோர் அதை இழந்துவிடுவர். என் பொருட்டுத் தம் உயிரை இழப்போரே அதைக் காத்துக்கொள்வர்.

**ஆ. திருத்தூதர் பவுல் அடிகளார் இயேசுவின் சீடர்களுக்கு வழங்கும் அறிவுரைகள்:**

“நீங்கள் கடவுளால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள். அவருடைய அன்பிற்குரிய இறைமக்கள். எனவே உளப்பூர்வப்பிரிவு, இரக்கம், மனத்தாழ்மை, கனிவு, பொறுமை ஆகிய பண்புகளால் உங்களை அணி செய்யுங்கள். ஒருவரை ஒருவர் பொறுத்துக் கொள்ளுங்கள் ஒருவர் மீது ஒருவருக்கு ஏதாவது முறையீடு இருந்தால் மன்னியுங்கள்.

ஆண்டவர் உங்களை மன்னித்ததுபோல நீங்களும் மன்னிக்க வேண்டும். இவையனைத்துக்கும் மேலாக அன்பையே கொண்டிருங்கள். அதுவே இவையனைத்தையும் பிணைத்து நிறைவு பெறச் செய்யும்.” - கொலோசையர் 3:12-14

**இ. இறைவன் வழங்கும் ஆறுதல்:**

“இனி நான் உங்களைப் பணியாளர் எனச் சொல்லமாட்டேன் ஏனெனில், தம் தலைவர் செய்வது இன்னதெனப் பணியாளருக்குத் தெரியாது. உங்களை நான் நண்பர்கள் என்றேன். ஏனெனில் என் தந்தையிடமிருந்து நான் கேட்டவை அனைத்தையும் உங்களுக்கு அறிவித்தேன்.” - யோவான் 15:15

நம் முன்னாள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் கருத்திற்கேற்ப இயேசு தம் சீடர்களை அடிமையென்ற நிலையிலிருந்து மாற்றி நண்பன் என்ற புதிய உரிமை உறவின் பரிணாமத்திற்கு தம் ஆழ்ந்த அன்பினால் உயர்த்துகின்றார். – யோவான் 15:13

ஒருவர் தம் நண்பர்களுக்காகத் தம் உயிரைக் கொடுப்பதைவிடச் சிறந்த அன்பு யாரிடமும் இல்லை என்று இயேசு தமது சிலுவைச்சாவின் மூலம் தமது மேலான அன்பை நிருபித்தார்.

இயேசுவின் நண்பன் என்பதில் உரிமைப்பேறு உடையவர்களாகத் திகழ்கிறோம். இறை பணியில் சோர்வடையும்போதும், தளர்ச்சியுறும் போதும் நம்மை நாமே ஊக்கமூட்ட இயேசுவில் இளைப்பாறுதல் அடைய இயேசுவின் அழைப்பு இதோ! மத்தேயு 11:28-30இல் காணலாம். மேலும் அவர் “பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே எல்லாரும் என்னிடம் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் கனியும் மனத்தாழ்மையும் உடையவன். ஆகவே என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் உள்ளத்திற்கு இளைப்பாறுதல் கிடைக்கும். ஆம் என் நுகம் அழுத்தாது; என் சுமை எளிதாயுள்ளது”. என்றார்

“இப்பொழுது நீங்களும் துயருறுகிறீர்கள்; ஆனால் நான் உங்களை மீண்டும் காணும்போது உங்கள் உள்ளம் மகிழ்ச்சி அடையும். உங்கள் மகிழ்ச்சியை யாரும் உங்களிடமிருந்து நீக்கிவிட முடியாது. அந்நாளில் நீங்கள் என்னிடம் எதையும் கேட்கமாட்டீர்கள்.

நீங்கள் என் பெயரால் தந்தையிடம் கேட்பதை எல்லாம் அவர் உங்களுக்குத் தருவார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்.” – யோவான் 16:22-23

## VI. இயேசுவைப் பின்பற்றுவதால் கிடைக்கும் ஆசிர்வாதங்கள்:

அதற்கு இயேசு, “உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். என் பொருட்டும் நற்செய்தியின் பொருட்டும் வீட்டையோ, சகோதரர்களையோ, சகோதரிகளையோ, தாயையோ, தந்தையையோ, பிள்ளைகளையோ, நிலபுலங்களையோ விட்டுவிட்ட எவரும் இம்மையில் நூறுமடங்காக வீடுகளையும் சகோதரர்களையும்

சகோதரிகளையும் தாயையும் பிள்ளைகளையும் நிலபுலங்களையும் இவற்றோடு கூட இன்னல்களையும், மறுமையில் நிலைவாழ்வையும் பெறாமல் போகார்.'' – மாற்கு 10:29-30

''நீங்கள் கிறிஸ்துவைச் சார்ந்தவர்கள் என்பதால் உங்களுக்கு ஒரு கிண்ணம் தண்ணீர் கொடுப்பவர், கைம்மாறு பெறாமல் போகார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்.'' (மாற்கு 9:41-42). ஆக இறைவன் நமக்கு மட்டுமல்லாது நம்முடைய அவரச வேளையில், ஆபத்து காலங்களில் உதவி செய்வோருக்கும் ஆண்டவர் கைம்மாறு அளிக்கின்றார்.

''நம்பிக்கை கொண்டோர் பின்வரும் அரும் அடையாளங்களைச் செய்வர்; என் பெயரால் பேய்களை ஓட்டுவர்; புதிய மொழிகளைப் பேசுவர்; பாம்புகளைக் கையால் பிடிப்பர்; கொல்லும் நஞ்சைக் குடித்தாலும் அது அவர்களுக்குத் தீட்டு இழைக்காது; அவர்கள் உடல் நலமற்றோர் மீது கைகளை வைக்க அவர்களும் குணமடைவார்கள்'' என்று கூறினார். (மாற்கு 16:17-18)

''பாம்புகளையும் தேள்களையும் மிதிக்கவும், பகைவரின் வல்லமை அனைத்தையும் வெல்லவும் உங்களுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறேன். உங்களுக்கு எதுவுமே தீங்கு விளைவிக்காது. ஆயினும் தீய ஆவிகள் உங்களுக்கு அடிபணிகின்றன என்பது பற்றி மகிழ வேண்டாம். மாறாக உங்கள் பெயர்கள் விண்ணகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன என்பது பற்றியே மகிழுங்கள்'' என்றார். (லூக்கா 10:19-20)

## VII. சீடத்துவ வாழ்வில் சீடரிடம் இயேசு எதிர்பார்ப்பது:

''ஐயா, என் மகனுக்கு இரங்கும்; அவன் வலிப்பு நோயால் பெரிதும் துன்புறுகிறான். அடிக்கடி தீயிலும் தண்ணீரிலும் விழுகிறான். உம் சீடர்களிடம் அவனைக்கொண்டு வந்தேன்; அவனைக் குணமாக்க அவர்களால் முடியவில்லை'' என்றார். அதற்கு இயேசு, ''நம்பிக்கையற்ற சீரழிந்த தலைமுறையினரே, எவ்வளவு காலம் நான் உங்களோடு இருக்க இயலும்? எவ்வளவு காலம் நான் உங்களைப் பொறுத்துக்கொள்ள இயலும்? அவனை இங்கே கொண்டு வாருங்கள்'' என்று கூறினார். (மத்தேயு 17:15-17)

பின்பு சீடர்கள் தனியாக இயேசுவை அணுகி வந்து, "அதை ஏன் எங்களால் ஓட்ட இயலவில்லை?" என்று கேட்டார்கள். "இயேசு அவர்களைப் பார்த்து, உங்கள் நம்பிக்கைக் குறைவுதான் காரணம். உங்களுக்குக் கடுகளவு நம்பிக்கை இருந்தால் நீங்கள் இம்மலையைப் பார்த்து 'இங்கிருந்து பெயர்ந்து அங்கு போ' எனக் கூறினால் அது பெயர்ந்து போகும். உங்களால் முடியாதது ஒன்றும் இராது என நான் உங்களுக்குச் சொல்கிறேன்." – மத்தேயு 17:19-20

ஆக சீடத்துவ வாழ்க்கையில் அடிப்படையானது மற்றும் இயேசு நம்மிடம் எதிர்பார்ப்பது இறை நம்பிக்கையே.

பேதுரு அவருக்கு மறுமொழியாக "ஆண்டவரே நீர்தாம் என்றால் நானும் கடல்மீது நடந்து உம்மிடம் வர ஆணையிடும்" என்றார். அவர் "வா" என்றார். பேதுருவும் படகிலிருந்து இறங்கி இயேசுவை நோக்கிக் கடல்மீது நடந்து சென்றார். அப்பொழுது பெருங்காற்று வீசியதைக்கண்டு அஞ்சி, அவர் மூழ்கத்தொடங்கையில், "ஆண்டவரே என்னைக் காப்பாற்றும்" என்று கத்தினார். இயேசு உடனே தம் கையை நீட்டி அவரைப் பிடித்து "நம்பிக்கை குன்றியவனே, ஏன் ஐயம் கொண்டாய்?" என்றார். (மத்தேயு 14:28-31)

ஆக இறைநம்பிக்கை சீடத்துவ வாழ்வில் வாழ்வதற்கு சுவாசம் போன்றது. சுவாசம் நின்று போனால் உடல் செத்த பிணம். இறை நம்பிக்கையும் சீடத்துவ வாழ்வில் இல்லையெனில் இறந்துபோன பிணத்துக்குச் சமம் ஆகும்.

## VIII. தன் சீடர்களுக்காக இயேசுவின் இறை வேண்டல்

"அவர்களுக்காக நான் வேண்டுகிறேன். உலகிற்காக அல்ல, மாறாக, நீர் என்னிடம் ஒப்படைத்தவர்களுக்காகவே வேண்டுகின்றேன். ஏனெனில், அவர்கள் உமக்கு உரியவர்கள்." - யோவான் 17:9

"அவர்களை உலகிலிருந்து எடுத்துவிட வேண்டுமென நான் வேண்டவில்லை; தீயோனிடமிருந்து அவர்களைக் காத்தருளவே வேண்டுகின்றேன். நான் உலகைச் சார்ந்தவன் அல்லாதது போலவே அவர்களும் உலகைச் சார்ந்தவர்கள் அல்லர்.

உண்மையில் அவர்களை உமக்கு அர்ப்பணமாக்கியருளும். உமது வார்த்தையே உண்மை. நீர் என்னை உலகிற்கு அனுப்பியது போல நானும் அவர்களை உலகிற்கு அனுப்புகிறேன்.

அவர்கள் உண்மையில் உமக்கு உரியவர் ஆகும்படி, அவர்களுக்காக என்னையே உமக்கு அர்ப்பணமாக்குகிறேன். அவர்களுக்காக மட்டும் நான் வேண்டவில்லை. அவர்களுடைய வார்த்தையின் வழியாக என்னிடம் நம்பிக்கை கொள்வோருக்காகவும் வேண்டுகிறேன்.

எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக! தந்தையே! நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பதுபோல், அவர்களும் நம்முன் ஒன்றாய் இருப்பார்களாக! இதனால் நீரே என்னை அனுப்பினீர் என உலகம் நம்பும்.'' – யோவான் 17:15-21

ஆம்; இன்றும் இயேசு நமக்காக விண்ணகத் தந்தையிடம் நமது நம்பிக்கையை உறுதிபடுத்துவதற்கும் சகோதரர்கள் என்ற ஒற்றுமையுணர்வோடு என்றும் இறை பணி செய்யவும் இறைவேண்டல் செய்து நமக்காக எப்போதும் விண்ணகத் தந்தையிடம் பரிந்து பேசுகின்றார் இயேசு.

''இவ்வாறு தாமே சோதனைக்கு உள்ளாகித் துன்பப்பட்டதனால் சோதிக்கப்படுவோருக்கு உதவி செய்ய வல்லவராய் அவர் இருக்கிறார்.'' – எபிரேயர் 2:18

**சீடத்துவ வாழ்வில் நாம் பின்பற்றக்கூடிய விதிமுறைகள்:**

1. இயேசுவினைப் போன்று அன்போடு தாழ்ச்சியுடன் கூடிய தொண்டனாக இறை பணியை எளிமையுடன் செயல்படுத்த வேண்டும்.

2. நம் புனிதர் மாண்ட்போர்ட்டினைப் போன்று அன்னை மரியாவிடம் ஆழ்ந்த பக்தி கொண்டு சீடத்துவ வாழ்விற்கு வழிகாட்ட பரிந்துரை செய்தல்வேண்டும்.

3. இறை பணியில் சந்திக்கும் சாவல்களை துணிவுடன் எதிர்கொள்ள நம்மை நாமே செதுக்கிக்கொள்ள வேண்டும்.

4. இறை பணியில் புறக்கணிப்பு செய்யும் தூசிகளின் உறவினைத் துண்டித்துவிட்டு தொடர்ந்து செபித்து இயேசுவைப் போல பயணிக்க வேண்டும்.

5. சீடத்துவ வாழ்வில் மனச்சோர்வுடன் இருக்கும்போதும் துன்பங்கள் நம்மை சூழும்போதும், இறைமகன் இயேசுவின் அறிவுரைகளையும் அவர் தரும் இளைப்பாறுதலையும் அவரது இறைவார்த்தைகளின் மூலம் அடிக்கடி படித்து தியானிக்க வேண்டும்.

6. இறை இயேசுவின் ஆசிர்வாதங்கள் இறையாட்சிக்கு ஊக்கம் தரும் மருந்துகள் ஆகும்.

7. சீடத்துவத்தின் ஆணிவேர் இறைநம்பிக்கை இதில் ஆழமாக வேரூன்றி அடிக்கடி தேவஅருட்சாதனங்களில் பங்கேற்பு செய்தல் வேண்டும்.

8. அலகையினால் நாம் அலைகழிக்கப்படும்போது இயேசு எப்போதும் நம்முடன் இருந்து நம்மை காப்பாற்ற நமக்காக விண்ணகத் தந்தையிடம் பரிந்துரை செய்கிறார் என்பதை அடிக்கடி நமக்கு நாமே நினைவூட்ட வேண்டும். நன்றி !

**சகோதரர்கள் ஒன்றுபட்டு வாழ்வது**
**எத்துணை நன்று! எத்துணை இனியது!**

**அருட்சகோ. அ. ஆரோக்கிய ராஜ், க.ச.**

**True discipleship in Brotherhood is about**
**Walking together; Learning together;**
**Living together; Growing together;**
**Serving together and**
**Pointing each other to Jesus.**

# திருச்சி மாநில மாண்ட்போர்த்துவ கபிரியேல் நண்பர்களுக்கான தவக்காலத் தியானம்

இடம் : புனித அருளப்பர் தொழிற்பயிற்சி நிறுவனம், மஞ்சம்பட்டி.
நாள் : 21.03.2026
நேரம் : காலை 9.00 மணி முதல் மாலை 4.30 வரை

**காலை அமர்வின் நிகழ்வுகள்:**

**வருகைப்பதிவு:**

முதல் நிகழ்வாக மாண்ட்போர்த்துவ கபிரியேல் நண்பர்களின் வருகைப் பதிவு காலை 9.00 மணியளவில் தொடங்கியது. இதில் ஏறத்தாழ 200 பேர் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொண்டனர். இந்த வருகைப்பதிவை அருட்சகோ. ஆரோக்கிய சுரேஷ் தலைமையில் புனித அருளப்பர் தொழிற்பயிற்சி நிறுவன ஆசிரியர்கள் மேற்கொண்டனர்.

**குத்துவிளக்கு ஏற்றுதல்:**

காலை 9.30 மணியளவில் வருகைப் பதிவினைத் தொடர்ந்து நிகழ்வுகள் இனிதே தொடங்கின. இதன் முதல் நிகழ்வாக குத்துவிளக்கு ஏற்றுதல் நடைபெற்றது. இதில் ஏற்றப்பட்ட ஐந்து வகை திரிகளும் அதனை ஏற்றியவர்கள் விவரமும் வருமாறு:

1. **தாழ்ச்சி** : அருட்தந்தை அரிமா அடிகளார்
2. **பிறர் அன்பு** : முதன்மை அருட்சகோதரர் ஜான் பிரிட்டோ
3. **கிறிஸ்துவின் அன்பு** : அருட்சகோ. பிரிட்டோ பீட்டர்ராஜ் அவர்கள் மஞ்சம்பட்டி, கலைமனைகளின் அதிபர்
4. **செபம்** : சகோதரி இருதயம் அவர்கள் மரியாயின் சேனை, மேலப்புதூர் பங்கு
5. **இரக்கம்** : செல்வன். அருள்ராஜ், மாணவர் புனித அருளப்பர் தொழிற்பயிற்சி பள்ளி

ஆகியோர் ஒளியை ஏற்றினர்.

**செபம்:**

காலை 9.40 மணியளவில் தொடக்க செபமானது அருட்சகோ. ஜேசுதாஸ் அவர்கள் தலைமையில், மணப்பாறை புனித அந்தோணியார் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் வழி நடத்தினர். இதில் தவக்கால மேன்மைபற்றிய முன்னுரையும், கிறிஸ்துவின் அன்பும், சமுதாயத்தில் விளிம்பு நிலையில் இருப்பவர்கள் மீது கவனம் செலுத்துதல் பற்றிய செபமும் மையக்கருத்தாக ஏறெடுக்கப்பட்டது.

**வரவேற்புரை:**

நிகழ்விற்கு வந்திருந்த அனைவரையும் MGA ஆணைய உறுப்பினர் திரு.போஸ்கோ அவர்கள் வரவேற்றார்.

சிறப்பு விருந்தினராக வந்த அருட்தந்தை லியோனார்ட் CSC, திருச்சி, மாநிலத் தலைவர் அருட்சகோதரர் ஜான் பிரிட்டோ, மஞ்சம்பட்டி மாண்ட்போர்ட் பள்ளி இயக்குநர் முதல்வர் அருட்சகோதரர் பிரிட்டோ பீட்டர்ராஜ், புனித அருளப்பர் தொழிற்பயிற்சி நிறுவன முதல்வர் அருட்சகோதரர் ஆரோக்கிய சுரேஷ், அருட்தந்தை அமல்ராஜ் SMM, மேலும், புனித அருளப்பர் தொழிற்பயிற்சி நிறுவனத்தின் மேனாள் இயக்குநரும் முதல்வருமான அருட்சகோதரர் ஞானப்பிரகாசம் ஆகியோர் அனைவருக்கும் பொன்னாடை அணிவித்து, நினைவு பரிசும், MGA நிர்வாக உறுப்பினர் ஆசிரியர் திரு. அசின் தங்கராஜ் எழுதிய “உனக்காகவே நான்” என்னும் தவக்காலத் தியான புத்தகமும் வழங்கப்பட்டன.

**முதன்மை சகோதரர் உரை: காலை 10.10 மணி**

முதன்மை அருட்சகோதரர் ஜான் பிரிட்டோ அவர்கள் சிறப்புரையின்போது தவக்காலம் ஓர் அமைதிக்கான பயணம் என்றும் புனித சூசையப்பர் அமைதியின் தந்தையாக இருந்ததும், புனித மாண்ட்போர்ட் அமைதியில் இறைவனின் செயல்பாடுகளில் 3 துறவற சபைகளை நிறுவியதும், அன்னை மரியா அமைதியில் இறைவனை தியானித்ததும், இயேசு தம் தந்தையோடு இணைந்து இருந்து அயலானை நேசித்ததும் போல நாமும் நம்முடன் சமூகத்தில் வாழக் கூடியவர்களின் துன்பத்தில் துணை நின்று மரியாளின் பண்புகளைப் பின்பற்றி இந்தத் தவக்காலத்தில் நம் வாழ்வை மாற்றிக்கொள்வோம் என முதன்மையுரை ஆற்றினார்.

**சிறப்புரை: காலை 10.30 மணி**

அருட்தந்தை அரிமா அவர்கள் தவக்கால சிந்தனை என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். அன்னாரது சிந்தனையில் இன்றைய சமுதாயத்தின் நிலை பற்றியும், இயேசு வாழ்ந்த காலத்தில் அன்றைய சமுதாயத்தின் நிலை பற்றியும் எடுத்துரைத்து, அதில் இயேசு மேற்கொண்ட போராட்டங்கள் குறித்து விளக்கினார். மேலும், இன்றைய சமுதாயத்தில் உள்ள அன்பிற்காக ஏங்கும், ஆதரவற்ற ஏழைகளை, முதியவர்களை, பின்தங்கியவர்களுக்கு நாம் எந்த உதவியைச் செய்கின்றோம். அவர்களை அன்பு செய்ய, அயலானை நேசிப்பது, அடுத்தவரின் பசியாற்றுவது, ஆடையற்றவர்களுக்கு ஆடை கொடுப்பது, பகிர்ந்து கொண்டு வாழ்வது போன்ற செயல்களைச் செய்து நாம் ஓர் அமைதியின் கருவியாக மாறவேண்டும் என எடுத்துரைத்தார்.

**நிழற்படம் எடுத்தல்: முற்பகல் 11.05 மணி**

நிகழ்விற்கு வந்திருந்த அனைவரும் குழுமி நின்று நிழற்படம் எடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 11.15 மணிக்கு தேநீர் இடைவேளை விடப்பட்டு நிகழ்வின் முதல் அமர்வு நிறைவுற்றது.

**நற்கருணை ஆசீர் மற்றும் திருப்பலி: முற்பகல் 11.40 மணி**

நற்கருணை ஆராதனையை திரு. ஆரோக்கியதாஸ் ஆசிரியர் அவர்கள் வழிநடத்த, அருட்தந்தை அரிமா அவர்கள் நற்கருணை ஆசியை வழங்கி திருப்பலியை 12.05 மணிக்கு தொடங்கினார். மேலும் அத்திருப்பலியின் மறையிரையில் “இன்று ஆசீர்வாதமான நாள், நாளை நாம்தான் எதிர்காலம், தூய ஆவியானவரின் கொடைகளுக்குத் தயாராகுங்கள், வார்த்தையால் அல்ல, வாழ்க்கையால்!” என்ற வார்த்தைகளைக் கூறி திருப்பலியை நிறைவேற்றினார்.

**பிற்பகல் அமர்வு:**

மதிய உணவிற்குப் பிறகு MGA ஆணைய உறுப்பினர் திரு.ஆரோக்கியதாஸ் ஆசிரியர் அவர்களும், செல்வி. ஜெனிட்டா மற்றும் அருட்சகோதரர் ஜான் சேவியர் அவர்களும் இறைபக்திப் பாடல்களைப் பாடி அனைவரையும் பிற்பகல் நிகழ்விற்கு தயாரித்தனர்.

**திருச்செபமாலை: பிற்பகல் 2.15 மணி**

சிவகங்கை மாண்ட்போர்ட் பள்ளியைச் சார்ந்த ஆசிரியர்கள் அனைவரும் திருச்செபமாலையை பக்தியுடன் தியானிக்க வழிகாட்டினர்.

**திருச்சிலுவைப் பாதை:**

செபமாலையைத் தொடர்ந்து பிற்பகல் 2.45 மணிக்கு திருச்சிலுவைப்பாதை தொடங்கியது. இதில் ஒவ்வொரு நிலையிலும் தாயாம் அன்னை மரியாளின் உள்ளம் எத்தகைய சஞ்சலத்திற்கு உள்ளாகி இருக்கும் என்பதை உயிரோட்டம் உள்ள வரிகளால் உருக்கமாக வழங்கினார் MGA ஆணைய உறுப்பினர் ஆசிரியர் திரு.போஸ்கோ அவர்கள். அவருக்குத் துணையாக MGA ஆணைய உறுப்பினர் ஆசிரியர் திரு. அசின் தங்கராஜ் அவர்களும் மற்றும் சில ஆசிரியர்களும் இருந்தனர்.

**சாட்சியப் பகிர்வு:**

சிலுவைப்பாதை முடிந்தபின் பிற்பகல் 3.25 மணிக்கு சாட்சியப் பகிர்வு நிகழ்வானது கேம்பியன் பள்ளி ஆசிரியர்கள் திரு. ஆண்டனி பெர்னாண்டஸ், திரு. ராபர்ட் அலெக்ஸாண்டர் மற்றும் திரு. மரிய சூசைராஜன் ஆகியோர் வழி நடத்தினர். இதில் மதுரையைச் சார்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியர் திரு. வின்சென்ட் மரியதாஸ், கேம்பியன் பள்ளி ஆசிரியர்கள் திரு. சதிஷ், திருமிகு. லீமா மணப்பாறையைச் சார்ந்த ஆசிரியை திருமிகு. மரிய ஜுலியானா மற்றும் கோவளத்தைச் சார்ந்த திரு. L. ஜெயராஜ் பாலக்குறிச்சி ஓய்வு பெற்ற ஆசிரியர் திரு. பிரான்சிஸ் செல்வராஜ் எனப் பல MGAயின் பொதுநிலை உறுப்பினர்களும் மரியாயின் சேனை உறுப்பினர்கள் சிலரும் தங்கள் கிறிஸ்தவ வாழ்வின் அனுபவங்களை சாட்சிகளாகப் பகிர்ந்து கொண்டனர்.

**முதன்மை சகோதரர் - ஆசியுரை:**

சாட்சியப் பகிர்வுக்குப் பின்பு பிற்பகல் 4.05 மணியளவில் நம் திருச்சி மாநில முதன்மை அருட்சகோததர் ஜான் பிரிட்டோ அவர்கள் ஆசியுரை வழங்கினார். அதில் “I am not a Judge” என்ற அசிசியாரின் வரிகளை மேற்கோள்காட்டி மற்றவர்களை மன்னிப்போம், மறப்போம், இந்தத் தவக்காலத் தியானம் அமைதியைப் பகிர்ந்து கொள்ளக்கூடிய வாழ்க்கையின் திருப்பு முனையாக அமையட்டும் என ஆசி கூறினார்.

**நன்றி நவிலல்: பிற்பகல் 4.10 மணி**

திருச்சி மரியாயின் சேனை தலைவர் திரு. ஜான் பீட்டர் அவர்கள் வந்திருந்த அனைவருக்கும் மற்றும் இந்தத் தவக்காலத் தியானத்திற்கு உதவி செய்த அனைவருக்கும் நன்றி கூறினார். நன்றியுரைக்குப் பிறகு மாண்ட்போர்த்துவ கபிரியேல் நண்பர்கள் கீதத்தை அனைவரும் சேர்ந்து பாடினர்.

இறுதியாக 4.20 மணியளவில் தேநீர் அருந்திய பின்னர் அவரவர் இல்லங்களுக்கு இறையாசியுடன் திரும்பினர்.

*அறிக்கை தயாரிப்பு:*
**ம. அசின் தங்கராஜ்**
**செ. ஜான் பிலிப்**
ஆசிரியர்கள்
ஆர்.சி. சூசை மேல்நிலைப் பள்ளி,
கழுகுமலை.

**“அமைதி என்பது வெறும் மோதல்கள் இல்லாத நிலை மட்டுமல்ல, மாறாக, அது நீதி, மாண்பு மற்றும் மன்னிப்பு ஆகியவற்றின் கனியாகும்.”**

**– திருத்தந்தை 14ஆம் லியோ**



# To Jesus through Mary

## A synthesis on Reflective Interaction

The Montfortian Gabrielite Associates (MGA), Province of Trichy conducted a retreat on 21.03.2026 on the theme, " Lent - A Journey to Peace." The retreat and meditation sessions from morning onwards were highly meaningful and spiritually enriching. Rev. Fr. Leonard, CSC, delivered several inspiring messages that deeply touched the hearts of everyone present.

In the afternoon, an interaction session titled "Towards Jesus through Marian Devotion" was held, in which all the members actively and enthusiastically participated. The programme was effectively coordinated and hosted by Mr. S. Antony Fernandez, a teacher of Campion School.

Each member shared the miracles and blessings they had experienced in their lives from Jesus Christ through Mother Mary.

Mr. Sathish Gnanapragasam, a teacher from Campion School, Trichy shared the wonders God had greatly worked in his life. He gratefully recalled how God blessed and supported him through the Montfort Gabriel Brothers during the times of struggles, obstacles, and financial hardships.

Mrs. Leema Rose, a primary school teacher from Campion School expressed her gratitude to God for the many graces received through her daughter and thanked Him for elevating her daughter to a level of national recognition and achievement.

Mr I.Vincent, (a retired teacher from Madurai) shared his life experiences, journeys of faith, and the blessings he received through Mother Mary with several touching examples.

Mr. Jayaraj a retired Headmaster from Kovalam near Chennai thanked God for the blessings he had received in his life. He also mentioned that he had documented the "Passion of Christ" and various forms of prayer and encouraged everyone to unite together in devotional efforts through that spiritual mission through multimedia presentations.

Mrs. Maria Juliana, a Teacher from Manapparai shared her powerful testimony of how she was completely healed and restored by Lord Jesus Christ after her severe accident she had met with in the year 2017. She recalled that she had remained unconscious due to the impact of the accident, but through the grace and mercy of Jesus Christ, she recovered fully and is now living a healthy and peaceful life. Her testimony deeply inspired and strengthened the faith of everyone gathered at the meeting.

Mr. Francis Selvaraj , a retired teacher from Palakurichy St. James Higher Secondary School, shared his testimony about the dedicated service rendered by the Montfort Brothers at Palakurichy for the educational needs of the poor and underprivileged students. He especially appreciated the selfless support and humanitarian service offered by Provincial Rev. Bro. John Britto and the Headmasters and the Brothers highlighting how their commitment has transformed the lives of many students through education and care.

A representative from Trichy region of Mary shared his testimony from his personal life, stating that through the intercession and guidance of Mother Mary, he was healed from his illness and received God's blessings of good health. He also expressed with gratitude that he had learned to live a life free from sin and to walk faithfully according to the Will of God. His sharing became a source of spiritual encouragement and inspiration to everyone present.

*Compiled by:*

**Mr. Thomas Maria Soosairajan,**

**Mr. Robert Alexander & Mr. Antony Fernandez,**

Teachers, Campion School,

Trichy.

**God Alone is**
**my tenderness,**
**God Alone is**
**my support,**
**God Alone is**
**my every good,**
**my life and**
**my wealth.**

**ALL FOR JESUS THROUGH MARY.**



# அன்னை மரி வழியாக இயேசுவிடம்

## கலந்துரையாடல் தொகுப்பு

மாண்ட்போர்த்துவ நண்பர்கள் இயக்க சந்திப்பு நிகழ்வு, ‘தவக்காலம் அமைதிக்கான ஒரு பயணம்’ என்ற தலைப்பில் அற்புதமான தியானம் நடைபெற்றது. காலை முதல் மிகச் சிறப்பாக நடைபெற்ற அந்த தியானத்தில் அருட்தந்தை அரிமா அவர்கள் அனைவருக்கும் நலம்தரும் பல்வேறு செய்திகளை வழங்கினார். அது அனைவருக்குள்ளும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துவதாக அமைந்தது. பிற்பகலில் மரியாளின் பக்தி முயற்சியின் வழியாக இயேசுவை நோக்கி சிந்தனையின் கீழ் கலந்துரையாடல் நிகழ்வு நடைபெற்றது இதில் அனைவரும் சிறப்புடன் பங்கேற்றனர். இந்நிகழ்வினை திருச்சி கேம்பியன் பள்ளி ஆசிரியர் திரு. எஸ். ஆண்டனி பெர்னாண்டஸ் அவர்கள் தொகுத்து வழங்கினார்கள். உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தங்கள் வாழ்வில் மரியா வழியாகவும் இயேசு கிறிஸ்துவின் வழியாகவும் நிகழ்ந்த அற்புதங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

திருச்சி கேம்பியன் பள்ளியின் ஆசிரியர் சதீஷ் ஞானபிரகாசம் அவர்கள் இறைவன் தனது வாழ்வில் நிகழ்த்திய அற்புதங்களைப் பகிர்ந்து கொண்டார். இன்னல்கள் இடையூறுகள் பொருளாதார நெருக்கடிகள் என பல்வேறு தடைகள் வாழ்வில் ஏற்பட்டபோது மாண்ட்போர்ட் கபிரியேல் சபை அருட்சகோதரர்களின் வழியாக இறைவன் தனக்குச் செய்த நன்மையை நன்றியுடன் நினைவு கூர்ந்தார்.

கேம்பியன் தொடக்கப்பள்ளி ஆசிரியர் திருமதி லீமா ரோஸ் அவர்கள் இறைவன் தனது மகளின் வழியாக பல்வேறு அருட்கொடைகளை தனக்கு வழங்கியதற்காகவும் தன் மகள் தேசிய அளவில் அங்கீகாரம் பெறக்கூடிய அளவிற்கு இறைவன் அவளை உயர்த்தியதற்காகவும் நன்றி கூறினார்.

மதுரையைச் சார்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியர் திரு. வின்செண்ட் மரியதாஸ் அவர்கள் தான் பயணித்த நிகழ்வுகளையும் மரியாளின் மூலம் பெற்றுக்கொண்ட நன்மைகளையும் பல்வேறு எடுத்துக்காட்டுகளுடன் பகிர்ந்துகொண்டார்.

சென்னைக்கருகே உள்ள கோவளம் என்ற ஊரைச்சார்ந்த திரு. ஜெயராஜ் அவர்கள் இறைவன் வழியாகத் தான் பெற்றுக்கொண்ட அருட்கொடைகளுக்காக நன்றி கூறினார். மேலும் இறைவனின் பாடுகளை தான் ஆவணப்படுத்தி தகவல் தொடர்பு சாதனங்கள் வழியாக இறையாட்சிப் பணிகள் செய்துகொண்டு இருப்பதாகக் கூறினார். அதன் வழியாக இறைபக்தி முயற்சியிலும் பிறரன்பு பணிகளிலும் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்றார்.

மணப்பாறையைச் சார்ந்த திருமிகு. மரிய ஜூலியானா ஆசிரியை அவர்கள், 2017ஆம் ஆண்டு தனக்கு ஏற்பட்ட விபத்தில் இருந்தும், சுயநினைவில்லாமல் இருந்த விபத்தின் தாக்கத்தில் இருந்தும், ஆண்டவர் இயேசு கிறிஸ்துவினால் முற்றிலும் சுகம் பெற்று நலமோடு வாழ்வதை சாட்சியாகப் பகிர்ந்து கொண்டார்.

பாலக்குறிச்சி புனித ஜேம்ஸ் மேல்நிலைப்பள்ளியில் இருந்து பணி ஓய்வுபெற்ற திருவாளர் பிரான்சிஸ் அவர்கள், பாலக்குறிச்சியியில் மாண்ட்போர்ட் சகோதரர்கள், ஏழை எளிய மாணவர்களின் கல்வி நலனில் செய்து வரும் சேவையை குறித்தும், தலைமை சகோதரர் அவர்களின் தன்னலமற்ற உதவியை குறித்தும் சாட்சி வழங்கினார்.

திருச்சி மறைமாவட்ட மரியாயின் சேனை குழுவினைச் சார்ந்த நண்பர் ஒருவர் அன்னை மரியாவின் வழியாக தனது நோய் நீங்கி சுகம் பெற்றதையும், கடவுளுக்கு எதிராகப் பாவம் செய்யாமல் வாழ கற்றுக்கொண்டதையும் தனது வாழ்வில் இருந்து சாட்சியாகக் கூறினார். நன்றி.

தொகுப்பு:
ஆசிரியர்கள் திரு. **தாமஸ் மரிய சூசைராஜன்,**
**திரு. ராபர்ட் அலெக்ஸாண்டர்**
**மற்றும்**
**ஆண்டனி பெர்னான்டஸ்**
கேம்பியன் பள்ளி, திருச்சி.

# மாண்ட்போர்ட் திருநாள் இணையவழி (Online Meet) கூட்டம்

நாள் : 26.04.2026, ஞாயிற்றுக்கிழமை
நேரம் : மாலை 4.45 முதல் 7.05 வரை

புனிதர் மாண்ட்போர்ட் விண்ணகப் பயணமான திருநாள் (28.04.2026) நிகழ்வை சற்று முன்னதாகவே 26.04.2026 அன்று கொண்டாட முடிவு செய்யப்பட்டது. அதன்படி இணையவழி கூட்டம் ஞாயிறு 26.04.2026 மாலை 4.45 மணியிலிருந்து மாண்ட்போர்த்துவ நண்பர்களுக்குக் கொடுக்கப்பட்ட கூகுள் இணைப்பில் இணைய தொடங்கினர்.

முதல் நிகழ்வாக ஒளி ஏற்றும் நிகழ்வை அருட்சகோதரர் ஜான் சேவியர் அவர்கள் ஏற்றினார். அதனைத் தொடர்ந்து தூய ஆவியாரை வரவேற்கும் விதமாக ஆசிரியர் திருமதி சாந்தா அவர்கள் “ஓ பரிசுத்த ஆவியே” என்ற ஆவியானவர் பாடலைப் பாடினார். அதைத் தொடர்ந்து அடையாறு புனித லூயிஸ் காது கேளாதோர் மற்றும் பார்வையற்றோர் நிறுவனத்தில் பணியாற்றும் அருட்சகோதரர்கள் புனிதர் மாண்ட்போர்ட் திருவுருவத்திற்கு மாலை அணிவித்து, மாண்ட்போர்ட் பாடலைப்பாடி மரியாதை செலுத்தினர். தொடர்ந்து, காட்டூர் மாண்ட்போர்ட் பள்ளி ஆசிரியை திருமதி ஜேனட் போஸ்டினா அவர்கள் தொடக்க ஜெபம் செய்தார்.

பின்பு ஆணைய உறுப்பினர் ஆசிரியர் திரு. அசின் தங்கராஜ் அவர்கள் இந்த இணைய வழி திருவிழாக் கொண்டாட்டத்தின் முக்கியத்துவத்தைப்பற்றிக் கூறினார். அதில் சமகால வாழ்க்கைச் சூழலைப் பிரதிபலிக்கும் சமகாலக் கவிஞர்களின் கவிதைகளை மேற்கோள் காட்டினார். அதில், சமூகப் பிரச்சனை என்னும் பெரும் புயலை எதிர்த்து நடப்பவர் யார்? என்ற மனுஷ்யபுத்திரனின் வினாவிற்கு விடையாக நம் புனிதர் மாண்ட்போர்டை சான்றாகச் சுட்டி அவர் வாழ்க்கை நிகழ்வுகளில் இருந்து அவர் சொன்ன வார்த்தையையும், வாழ்ந்த வாழ்க்கையையும் ஒப்பிட்டு “வாழ்ந்து காட்டிய வழிகாட்டி மாண்ட்போர்ட்” என்றுரைத்தார்.

புனிதரின் 310வது நினைவு திருவிழாவில் அவர் பதம் பற்றி வாழ்ந்திட உறுதியேற்கக் கூறினார். இணையவழியில் இணைந்திருக்கும் அனைவரையும் வரவேற்றார்.

அதன்பின்பு பாளையங்கோட்டையை சேர்ந்த திரு.வின்சென்ட் அவர்கள் புனித மாண்ட்போர்ட் எழுதிய நூல்கள் 20க்கும் மேற்பட்டவை என்று கூறி, மரியாளின் மீது உண்மை பக்தி, ஜெபமாலை ரகசியம், நித்திய ஞானத்தின் மீது உண்மையான பக்தி போன்ற நூல்களை அறிமுகம் செய்தார். மேலும், அவற்றிலிருந்து இறைபிரசன்ன உணர்வைத் தந்த வரிகளை எடுத்துக்கூறினார்.

அதனைத் தொடர்ந்து மாண்ட்போர்ட்டின் வாழ்க்கையையும் MGA வளர்ந்து வந்த பாதையையும் படக்காட்சியாக MGA ஆணைய உறுப்பினர் ஆசிரியர் திரு. போஸ்கோ அவர்கள் காட்சிப்படுத்தினார்.

பிறகு மாண்ட்போர்ட் மன்றாட்டு மாலையை பெருங்குடி மாண்ட்போர்ட் பள்ளி ஆசிரியர் திரு. பிரபாகர் அவர்கள் அனைவரையும் இணைந்து கூறச் செய்தார்.

பின்பு, புனித மாண்ட்போர்ட் திருநாள் செய்தியை புத்தாநத்தம், புனித ஆசீர்வாதப்பர் ஆலயப் பங்குத்தந்தை அமல்ராஜ், SMM (மாண்ட்போர்ட் குருக்கள் சபை) அவர்கள் வழங்கினார்.

அதில், இது மகிழ்வின் திருவிழா என்றும், அன்னை மரியாளின் பிள்ளைகள், இன்றைய சவால்களை எப்படிக் கையாள்வது, இத்தகைய சவால்களை நம் புனிதர் மாண்ட்போர்ட் எப்படிக் கையாண்டார் என்பதை எடுத்துரைத்தார். மாண்ட்போர்ட் செல்லும் போதெல்லாம் கடினமான சிலுவையைச் சுமந்து கொண்டு சென்றார். வாழ்வில் சிலுவைகளைச் சுமக்கக் கற்றுக் கொள்ள வேண்டுமே தவிர ஓடக்கூடாது. அதற்குத்தான் கடவுளின் துணை, மாதாவின் துணை நமக்கு எப்போதும் வேண்டும். ஏழைகளுக்கு உதவி செய்யத் தயங்கக் கூடாது, உண்மையாக வாழ வேண்டும்; கடவுள் மாதா வழியாக இறைமகனை நமக்குக் கொடுத்தார். எனவே நாமும் அவரிடம் செல்வோம். இயேசுவிடம், தூய ஆவியானவரிடம் செல்லும் வழியை அவரே காட்டுவார் போன்ற இறை செய்திகளைப் பகிர்ந்து கொண்டார்.

பின்பு அன்னை மரியாளுக்கு அர்ப்பண செபத்தை கோவளம் திரு. ஜெயராஜ் அவர்கள் வழங்கினார். அதனைத் தொடர்ந்து சின்னக்கனால் மாண்ட்போர்ட் பள்ளி ஆசிரியர் திருமிகு. ஜோஸி ஜோஸ் மலையாளத்தில் இறுதி செபத்தைக் கூறினார். இந்த செபமானது மாண்ட்போர்ட் எழுதிய 164 பாடல்களில் 24வது பாடல் ஆகும். இந்தப் பாடலை செபமாகச் செபித்தார்.

தொடர்ந்து திவ்ய நற்கருணை ஆசியை அருட்தந்தை அமல்ராஜ் அவர்கள் வழங்கினார்.

அதன் பின்பு திருவிழா தியான நிகழ்வில் இணைய வழியில் கலந்துகொண்ட மற்றும் பங்கெடுத்த அனைவருக்கும், திருவிழாச் செய்தி வழங்கிய அருட்தந்தை அவர்களுக்கும், திருச்சி MGA மண்டல இயக்குநர் அருட்சகோதரர் ஜான் சேவியர் அவர்கள் நன்றி கூறினார்.

இறுதியாக மாண்ட்போர்ட் கீதம் பாட, நிகழ்வு இனிதே நிறைவுற்றது.

அறிக்கை தயாரிப்பு:

**ம. அசின் தங்கராஜ், செ. ஜான் பிலிப்**

ஆசிரியர்கள்

ஆர்.சி. சூசை மேல்நிலைப் பள்ளி,

கழுகுமலை.



**"When we praise and bless Our Lady by saying the Angelic Salutation She always passes on these praises to Almighty God in the same way as She did when She was praised by St. Elizabeth. The latter blessed her in her more elevated dignity as Mother of God and Our Lady immediately returned these praises to God by her beautiful Magnificat."**

**- St. Louis Marie de Montfort**




| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | 10 |
| 2 | | | | | 8 | | |
| 3 | | | | | | X | |
| X | 4 | | | | | | |
| 5 | | | | | | 11 / 13 | |
| | | X | X | 9 | | | |
| | 6 | | | | | | X |
| 7 / 12 | | | | | | | X |

**இடமிருந்து வலம்:**

1. நம் புனிதர் மாண்ட்போர்ட்டை தங்கள் பக்த சபைக்குப் பாதுகாவலர் வரிசையில் சேர்த்துக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றிய பக்த சபை?
2. தனது இளமைப் பருவம் முதலே மாண்ட்போர்ட்டின் பக்தி முறைகளைப் பின்பற்றி வருவதாகக் கூறியவர்?
3. புனித மாண்ட்போர்ட்டின் தாய் பெயர்?
4. நம் புனிதர் கல்வாரி அமைத்த இடம்?
5. மரியின் வழியாக .....................
6. கடவுள் மட்டும் என்பது அவரது தாரக .....................
7. “செபமாலை இரகசியம்” நூலில் குறிப்பிடப்படும் “ஒரு ரோஜா மொட்டு” யாருக்கானது?
8. புனித மாண்ட்போர்ட் தன்னுடைய பள்ளிப் படிப்பை ..................... நகரில் பயின்றார்.

**இடமிருந்து வலம்:**

9. புனித மாண்ட்போர்ட் பிறந்த ஆண்டு

**மேலிருந்து கீழ்:**

10. புனித மாண்ட்போர்ட் தொடங்கிய சபைகளுள் ஒன்று “ஞானத்தின் ......”
11. புனித மாண்ட்போர்ட் இறைபதம் எய்திய ஆண்டு .....................

**கீழிலிருந்து மேல்:**

12. சிலுவையின்மையே .....................
13. புனித மாண்ட்போர்ட் குருவாகப் பணியாற்றிய ஆண்டுகள் ..................

**மாண்ட்போர்ட் சுடோகு விடைகள்**

01) மரியாயின் சேனை 02) போப் பியஸ் 03) ஜீன் ராபர்ட்
04) பொன்சாத்தோ 05) இயேசுவிடம் 06) மந்திரம்
07) சிறுவர்கள் 08) ரென் 09) 1673
10) மகள்கள் 11) 1716 12) சிலுவை 13) 16

# The Canticle of the Creatures

## by St. Francis of Assisi

Most High, all-powerful, good Lord,
yours is the praise,
the glory and the honour
and every blessing.

To you alone, Most High,
do they belong,
and no one is worthy
to speak your name.

Praised be you, my Lord
with all your creatures,
especially Sir Brother Sun,
who is the day through whom
you bring us light.

And he is lovely, shining
with great splendour,
for he heralds you, Most High.

Praised be you, my Lord,
through Sister Moon and Stars.
In heaven you have formed them,
lightsome and precious and fair.

And praised be you, my Lord,
through Brother Wind, through
air and cloud, through calm
and every weather by which
you sustain your creatures.

Praised be you, my Lord,
through Sister Water,
so very useful and humble,
precious and chaste.

Praised be you, my Lord
through Brother Fire,
by whom you light up
the night, and he is
handsome and merry,
robust and strong.

Praised be you, my Lord,
through our Sister, Mother Earth,
who sustains us and directs us
bringing forth all kinds of fruits
and coloured flowers and herbs.

Praised be you, my Lord
through those who forgive
for your love
and who bear sickness and trial.

Blessed are those
who endure in peace,
for by you, Most High,
they will be crowned.

Praised be you, my Lord,
through our Sister Bodily Death
from whom no living being
can escape.

How dreadful for those
who die in mortal sin!
How blessed are those she
finds in your most holy will
for the second death
can do them no harm.

O praise and bless my Lord,
thank him and serve him
humbly but grandly!













செயிண்ட்-லாரன்ட்-சுர்-செவ்மேயில் கடும் சோர்வினால் MONTFORT நோய்வாய்ப்பட்டு படுக்கையில் வீழ்ந்தார்







பயமா... எனக்கா?!!
7
இயேசுவிற்கும் மரியாளுக்கும் இடையே நான் அடைக்கலமாக உள்ளபோது, யார் என்னை என்ன செய்ய முடியும்?
TRUE DEVOTION TO MARY
8
உங்கள் பெயர் என்ன?
9
பெர்னர்ட்
ஹெலன்
10
பாதர்... உங்க முழுப் பெயர் வேற வருமாமே..
ஹா... ஹா..
11
ஆம் குழந்தைகளே
என் முழுப் பெயர் Louis Marie Grignion de Montfort. Grignion என்பது என் குடும்பப் பெயர் மாண்ட்போர்ட் என்பது என் ஊரின் பெயர்...
12
ஓ...
உங்கள் ஊரைப் பற்றி சொல்லுவீங்களா?
13
குழந்தைகளின் கேள்விகளால் மாண்ட்போர்ட் உற்சாகமானார்
14
அவர் புன்னகையுடன்... தான் பிறந்த ஊரான Montfort பற்றி கூறலானார்.
Montfort
15


மான்ட்ஃபோர்ட்-சுர்-மியூ (Montfort-sur-Meu) என்பது வடமேற்கு பிரான்சில் உள்ள பிரிட்டனியின் இல்லே-எட்-விலேன் மாகாணத்தில், ரென்னஸிலிருந்து சுமார் 30 கி.மீ.க்கு மேற்கே அமைந்துள்ள ஒரு சிறிய இடைக்கால நகரமாகும்.
மாண்ட்போர்ட் சுர்-மியூ
பிரான்ஸ்
RENNES 30 km
16


Montfort-sur-Meu, France
Brittany, Ille-et-Vilaine – 11th Century Town
17


இது ஒரு அமைதியான, கிராமப்புற பிரிட்டன் உணர்வை தரக்கூடிய சிறிய ஊர். இந்த நகரம் "பேஸ் டி மான்ட்ஃபோர்ட்" என்ற நகரப் பகுதியின் ஒரு பகுதியாகும்
PAYS DE MONTFORT
18


மேலும் அதன் பாதுகாக்கப்பட்ட வரலாற்று மையம், கூழாங்கல் தெருக்கள் மற்றும் மரச்சட்ட வீடுகள் ஆகியவற்றிற்குப் பெயர் பெற்றது. பல கட்டிடங்கள் உள்ளூர் ஊதா நிறக் கற்களால் ('பௌடிங்' அல்லது "மான்ட்ஃபோர்ட் கல்") கட்டப்பட்டுள்ளன, இது நகரத்திற்கு ஒரு தனித்துவமான 'ஊதா நகர' தோற்றத்தை அளிக்கிறது.
மான்ட்ஃபோர்ட் கல் (ஊதா கல்)
19


2 இது மியூ மற்றும் கருன் ஆறுகள் சங்கமிக்கும் இடத்தில் அமைந்துள்ளது மற்றும் அற்புதமாக பக்தி நிறைந்த மக்களைக் கொண்டுள்ளது.
20


வரலாறும் பாரம்பரியமும் கொண்ட மாண்ட்ஃபோர்ட்–சுர்–மியூ 11 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. ஆலைகளுக்கும் தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கும் ஆற்றலை வழங்கிய அதன் ஆறுகளை வைத்து இது வளர்ச்சி காண்கிறது
21


இந்த நகரத்தில் பழைய கோட்டைச் சுவர்களின் பகுதிகள் மற்றும் முன்னாள் Tour d'Artillerie (ஒரு பீரங்கிக் கோபுரம்) நினைவு சின்னங்கள் உள்ளன.
Tour d'Artillerie (பீரங்கிக் கோபுரம்)
முன்னாள் பீரங்கிக் கோபுரம். நகரின் பாதுகாப்புக்கு முக்கியமான நினைவு சின்னம்.
பழைய கோட்டைச் சுவர்
மழலைகளுடன் மாண்டபோர்ட்டின் உரையாடல் தொடரும்....
22

# *From* Riches *To* Rags *For* Christ





Commemoration of the 800th Death Anniversary of

# ST. FRANCIS OF ASSISI

## 1226 - 2026

## அசிசி நகர் புனித பிரான்சிஸ்

800ஆவது ஆண்டு நினைவு யூபிலி